வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.4/20

வழக்கு சாட்சி - அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெருமாள் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பெரியபாண்டி | தொழில் | ஆட்டோ ஓட்டுனர் |
| கிராமம் | வெங்கடாஜலபுரம் | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.24

**( 1** முதல் **4** எதிரிகள் வழக்கில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளார்கள்**. )**

அரசு தரப்பில் முதல் விசாரணை

எனது அப்பா பெயர் பெரியபாண்டி, வழக்கில் பெருமாள் என காட்டப்பட்டுள்ளது. வெங்கடாஜலபுரத்தில் சுப்புராம் என்பவருக்கு தோட்டம் உள்ளது. சுமார் 6 வருடத்திற்கு முன்பு சண்டை பிரச்சனை காரணமாக போலிசார் விசாரித்தார்கள். நிலம் யார் பார்க்கிறார்கள் என்று என்னிடம் கேட்டார்கள். சுப்புராம் பார்ப்பதாக சொன்னேன். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை தவிர்த்து இரண்டு முறை சிசிஎண்.178/21 மற்றும் சிசி.எண்.330/18 ஆகிய வழக்குகளில் சுப்புராமுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் நான் சாடசியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரிதான். சுப்புராம் எனக்கு உறவினர் கிடையாது. எங்கள் ஊரைச்சேர்ந்தவர். போலிச் என்னை என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. சுப்புராம் எனக்கு என் ஊருக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.